Written by
Monday, 18 August 2008 15:24 -



சகுனம்!

சகுனம் பார்ப்பது எவ்வளவு காட்டுமிராண்டித்தனமாக வாழ்கிறார்கள்; எத்தனை டிகிரி மூட்டாள் என்பதை அளக்கப் பார்ப்பான் வதைத்துள்ள அளவுகோலயோகும்.

மூகூர்த்தம் பார்ப்பது அஸ்திவாரமே இல்லாமல் ஆகாயத்திலே கட்டுகிற கோட்டைக்கு வாயிற்படி கிழக்கிலா? மறேக்கிலா? என்று அடித்துக் கொள்வதாகும்.காலை 4-மணிக்குத் திருமணம் என்பார்கள். அப்போது தான் நல்ல நேரம் என்பார்கள். எந்த வேலைக்கும் சரியில்லாமல் ஒன்றுமே செய்ய முடியாமல் இடஞ்சலான நேரத்தில் வதைத்துக் கொண்டு நேரம், நேரம் என்று பறக்கிறார்களே எவ்வளவு முட்டாள்தனமிது? நல்ல ராகு காலத்தில் 3-மணிக்குக் கோர்ட்டிலே கூப்பிட்டால் பசோமல் இருந்து விடுவார்களா? எக்ஸ்பார்ட்டியாகி விடும். உடனே ஓடிவிடுவார்கள். நல்ல எமகண்டத்தில் ரயில் புறப்படுகிறது என்பதற்காக ஏறாமல் இருந்து விடுவார்களா? உலகமலெல்லாம் முன்னேறுகின்ற சமயத்தில் நம்முடையை சங்கதியைப் பார்த்தால் எவ்வளவு பிற்போக்கு? முற்காலத்தில் முன்னேறி இருந்தவர்கள் இந்தக் காலத்தில் இம்மாதிரி இருக்கலாமா? நம்மிடமே வாங்கிக் கொண்டு நம்மையே கீழ்மகனாக ஆக்கி விட்டுப் போய் விடுகிறானே பார்ப்பான் என்பதற்காக எதிர்க்கிறோமே தவிர 2-படி அரிசி வாங்கிக் கொண்டு போகிறான் என்பதற்காகவா? எதிர்க்கிறோம். அந்தக் காலத்தில் மோட்டார் ஆகாய விமானம் ரயில் இல்லை. இப்போது அவகைளையும் பயன்படுத்திக் கொள்கிறோம். நாம் இழிவு படுத்தப்படுகிற சங்கதிகளை மட்டும் ஏற்றுக் கொண்டு முன்னேறே மறுக்கிறோம். எல்லாத்துறகைளிலும் எல்லோருக்குள்ளும் மாற்றஉணர்ச்சி ஏற்பட்டால் ஒழிய நம் நாட்டைப் பீனேற்ற நம் சமுதாயத்தைப் பீனேற்ற தாழ்த்தப்பட்ட – அடிமையாக்கப்பட்ட நாட்டுக்கும், சமுதாயத்திற்கும், விமோசனமில்லை.

---------- பெரியார் ஈ.வெ.ரா. - நூல்: "வாழ்க்கைத்துணை நலம்" பக்கம் - 34-35

Written by
Monday, 18 August 2008 15:24 -

http://thamizhoviya.blogspot.com/2008/08/blog-post_8447.html